[1982 ஏப்ரல் 7

மாண்புமிகு திரு. எஸ். டி சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்திலும், மத்தியிலும் ஒரே சமயத்தில் ஒரே கட்சியினுடைய ஆட்சி இருக்கிறது. சில இடங்களில் மாறி மாறி இருக்கின்றன. பேசுகின்றபோது, முதலிலே எல்லா மாநிலங்களும் அதிகாரங்களை விடக்கூடாது என்று எல்லா முதலமைச்சர்களும் முதலிலே தெரிவிக்கிறார்கள் அதற்குப் பிறகு, என்ன காரணமோ கட்சியின் ஆணைக்கு கட்டுப்பட்டு, விட்டு விடுகிறார்கள் என்று கருதுகிறேன்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே இருந்து வரக்கூடிய 106 கோடி ரூபாய் மத்திய அரசு எடுத்துக்கொள்ளும் என்று சொல்லப்பட்டது. உண்மையிலேயே மத்திய அரசாங்கமானது தமிழ்நாட்டில் இப்போது பொருளாதாரச் சிக்கலை உண்டாக்கி, அதன்மூலம் அவர்கள் லாபம் பெற விரும்புகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மூலக் கேள்விக்கு முதலிலே படிக்கின்ற போது விளக்கமாக பதில் கொடுத்திருக்கிறேன். இப்படி எடுத்துக் கொள்வதால், மாநில அரசுகள் ஒரு முனிசிபாலிடியாக, குளோரிபைட் முனிஸிபாலிடியாக ஆக்குகின்ற திட்டம்தான் என்பதையும், மேலும் இப்படி எடுத்துக்கொண்டால் மாநில அரசு மத்திய அரசின் ஒரு நிர்வாக யூனிட்டாக, அட்மினிஸ்டிரேடிவ் யூனிட்டாக ஆக்குவதாக ஆகும் என்பதை முதலிலே படித்துக் காண்பித்திருக்கிறேன்,

தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட
கிராமங்களில் பட்டாக்கள் வழங்கும் திட்டம்

* வினா எண். 779—திரு. செ. செம்மலை: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம். தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கிராமங்களில் வீட்டுமனைப்பட்டா நிலப்பட்டாக்கள் வழங்குவது நிறுத்திவைக்கப்பட்டிருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் அதன் காரணம் யாது?

(இ) உடனடியாக பட்டாக்கள் வழங்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு, எஸ்.டி. சோமசுந்தரம் :—(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட 16 கிராமங்களில் பாப்பம்பாடி, மானத்தார் ஆகிய இரு கிராமங்களும் தடையாணைக்கு உட்படாதவை என்றும், தசவிளளுகு அழகு

1982 ஏப்ரல் 7]

சமுத்திரம், சருக்கல்வாடி ஆகிய 3 கிராமங்களுக்கு தடையாணை நீக்கப்படாத கிராமங்கள் என்றும், எஞ்சியுள்ள 11 கிராமங்களுக்குத் தடையாணை நீக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9.30)

திரு. செ. செம்மலை: மாண்புமிகு தலைவர் அவர்களே, சேலம் உருக்காலைக்கு நிலம் ஆர்ஜிதம் செய்தபோது, அங்கே அந்த ஆலைக்கு நிலம் தேவைப்படும் என்ற அடிப்படையில் இந்த தடை விதிக்கப்பட்டது. இப்போது தடை நீக்கப்பட்டுள்ளதாக அறிகிறேன். 300 ஏக்கர் நிலம் இருந்தால் போதும் என்று அந்த நிறுவனம் சொன்னதற்கு பிறகு எந்த இடம் என்று குறிப்பிட்டுச் சொல்லாததால் இந்தத் தடை அமலில் இருப்பதாக அறிகிறேன். அந்த நிறுவனம் எந்த இடம் தேவையென்று சொல்லியதற்கு பின்னால் இந்தத் தடையை நீக்கி உடனடியாகப் பட்டா வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, சேலம் உருக்காலைக்கு நிலம் வேண்டும் என்பதற்காக 5 மைல் சுற்றளவிற்கு இந்த தடை முதலில் போடப்பட்டது. இப்போது அவர்களுக்கு எல்லாம் நிலம் கொடுத்துவிட்டு, மீதியை விட்டு விடலாம் என்று தடை நீக்கப்பட்டிருக்கிறது, தடை நீக்கப்பட்டதை எந்தெந்த கிராமங்களுக்குக் கொடுக்கலாம் என்பதை மாவட்ட ஆட்சியாளரால் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அரசு அதுபற்றி ஆராய்ந்து விரைவிலே ஒரு அறிவிப்பைத் தரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இளநிலை இந்தி ஆசிரியர்களுக்கு தேர்வுநிலை வழங்கும் திட்டம்.

* வினா எண் 780— திரு. என் எஸ். வி. சித்தன்: மாண்புமிகு கல்வி அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துவக்கப் பள்ளிகளில் (Higher Grade) இளநிலை ஸ்தானத்தில் நியமிக்கப்பட்ட இந்தி ஆசிரியர்களுக்கு இன்னும் தேர்வு நிலை (Selection Grade) வழங்கப்படாத காரணம் என்ன?

(ஆ) அவர்கள் எப்பணியில் தற்போது அமர்த்தப்பட்டிருப்பினும் ஊதியப் பாதுகாப்பு ஆணையின்படி அவர்களுக்கு தேர்வுநிலை வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) துவக்கப் பள்ளிகளில் ஹையர் கிரேடு (இளநிலை) பணியிடங்களில் நியமிக்கப்பட்ட முன்னாள் இந்தி ஆசிரியர்கள், இளநிலை ஆசிரியர்